## 1.1 அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்துகளிலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 3(1) பிரிவு | 2018 ஆம் ஆண்டின் 5 மாதங்களுக்கு அண்மிய காலமாக பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரின் பதவிக்காலம் முடிவடைவதுடன், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் தலைவர் மற்றும் | இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமையால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. அந்த அதிகாரம் கூட்டுத்தாபனத்திடம் இல்லாதிருந்தமையால் அவ்வாறான நிலமைகள் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை ஆகும். | |
| (ஆ) | தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.2 மற்றும் 13.3 ஆம் பிரிவுகள். | பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ சந்தைப்படுத்தல் ஆகிய பதவிகள் இரண்டும் 2009 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமாக காணப்படுவதால் அந்த 02 பதவிகளுக்காக நீண்ட காலமாக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2018 யூலை 18 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் பிரகாரம் அந்த திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பு செய்ய முடியாதென்பதால் 2018 செப்தம்பர் 21 ஆந் திகதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ள அங்கீகாரம் இது வரையிலும் கிடைத்திருக்காமையால் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியாது. | தாபனவிதிக் கோவை மற்றும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (இ) | 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடி/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டினுள் கூட்டுத்தாபனம் 04 முகாமைத்துவ மற்றும் கணகாய்வு குழுக்களை நடாத்த வேண்டிய போதிலும், 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டிற்காக 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | ஆண்டினுள் 04 கூட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமையால் கூட்டங்களை நடாத்த முடியாதிருந்தது. | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியின் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிராததுடன், ஒட்டுமொத்த பதவியணியில் திட்டவட்டமாக நிலவிய பொறுப்புகளுக்கு உரியதாக நிலவும் திறன்கள் மற்றம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடன் குறித்த பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடமை வெற்றித்தன்மைக்காக காணப்பட வேண்டிய திறன்களாவதுடன், இடைவெளியை இனங்காண்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே திறன்கள் இடைவெளியை குறைப்பதற்காக நிறுவனத்திற்கு விசேடமான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 9.3 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பணி ஒப்படைக்கப்பட்டிருந்த முன்னாள் முகாமையாளர் (ஆளணி) பதவியிலிருந்து விலகிச் சென்றமையால்மீள ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த பணியை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க முடியும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 6.5.3 ஆம் பற்தி | நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக ஆண்டறிக்கைகள் 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டின் அறிகைக 2018.08.08 ஆந் திகதி அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், உரிய ஆவணங்கள் அமைச்சிடமிருந்து இது வரையிலும் கிடைத்திருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் அறிக்கை மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 309,088,327 ஆன இலாபமொன்றாக உள்ளதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 179,486,659 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 488,574,986 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செலவினங்கள் 74 சதவீதத்தினால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான மீளாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக ஏனைய வருமானங்கள் ரூபா 139,677,455 இனால் அதிகரித்திருந்ததுடன், அது விகிதாசாரமாக 68 சதவீதம் ஆகும். அந்நிய செலாவணி இலாபம் அதிகரித்தமை இந்த வருமானத்தின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது நிதிச் செலவினங்கள் ரூபா 5,454,874 இனால் அல்லது 546 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், தேறிய நட்டஈட்டு செலவினம் ரூபா 472,182,189 இனால் அல்லது 87 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் புதிய தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பொன்று தாபிப்பதற்காக உள்ளக கட்டமைப்பு கற்கையொன்றினை மேற்கொள்ளல் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணி 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | SLIIT நிறுவனத்திடமிருந்து உதவியினை பெற்றுக்கொள்ள எண்ணியிருந்த போதிலும், அந்த நிறுவம் இவ்வாறான பணிகளை மேற்கொள்வதில்லை என்பதால் பணிப்பாளர் சபையின் அறிவுரைகளின் அடிப்படையில் பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டு பொருத்தமான நிறுவனமொன்றினை இதற்காக தெரிவு செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | நிதிப்பிரிவின் மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் தரவுகளை ஒப்பீட்டுக்கு உட்படுத்தி, சரியான தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய முறைமைகள் தாபிக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானத்தில் சுமார் 87 சதவீதமானது ஏற்றுமதி கடன் காப்புறுதி சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் ஈட்டப்படுவதுடன், 2017 ஆம் ஆண்டின் போது மொத்த தவணை வருமானத்திற்கு ரூபா 58,988,550 அல்லது 28 சதவீதமான பங்களிப்பொன்றினை வழங்கியிருந்த ஏற்றுமதியாளரிடமின் பங்களிப்பு 2018 ஆம் ஆண்டின் போது குறைவடைந்திருந்தது. அவ்வாறே, 19 ஏற்றுமதியாளர்களின் மொத்த தவணை வருமானத்திற்கு ரூபா 142,666,310 அல்லது 69 சதவீதமான பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாஎறனினும், கூட்டுத்தாபனத்தின் நிலவுகை மற்றும் விளைதிறனை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் இவ்வாறான ஏற்றுமதியாளர்களை அறிவூட்டும் பணிகளை பிரசித்திப்படுத்தல் மற்றும் முறைமைப்படுத்துவதற்குரிய முறையான வேலைத்திட்டமொன்றினை கூட்டுத்தாபனம் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்களின் வருமானம் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது குறைவடைந்தமைக்கு தாக்கம் செலுத்திய விடயங்கள் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகியிருப்பதுடன், 2018 ஆம் ஆண்டின் போது தேயிலை ஏற்றுமதி ஒட்டுமொத்தமாக குறைவடைந்தமை மற்றும் ஏற்றுமதியாளர்களால் கொடுப்பனவு நிபந்தனைகள் திருத்தப்பட்டமை ஆகியன இதற்கு தாக்கமளித்திருந்தது. | வருமானம் குறைவடைந்தமைக்கு தாக்கம் செலுத்தியவற்றை தீர்ப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 56 மற்றும் உள்ளவாறான பதவியணி 34 ஆனமையால் அத் திகதியில் உள்ளபடியான 22 வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களிடையே நிறைவேற்று மட்டத்திலான வெற்றிடங்கள் 16 ஆகும். | நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைக்ள திணைக்களத்தின் அங்கீகாரத்தினை எதிர்பார்த்துள்ளேன். | வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கணக்கு அறிக்கைகள் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், 2019 மே 10 ஆந் திகதியே கண்ககாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிராமையால் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் கையொப்பமிட்ட நிதிக்கூற்றுக்கள் 2019.02.28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன், பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் அங்கீகாரத்துடனான அறிக்கை 2019 மே 10 ஆந் திகதி உரிய பட்டோலைகள் மற்றும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், இறுதியாக 2010 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | 2019-2021 இன் 03 வருடங்களுக்கரிய கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் பாதீட்டில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கான அங்கீகாரம் 2019 மே மாதம் கிடைத்திருந்தது. அதற்கமைய கூட்டிணைந்த திட்டத்தினை 2019 ஆம் ஆண்டினுள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**4.3 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (i) | 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுமத அபிவிருத்திப் பணிகளுக்காக வளங்கள் ஈடுபடுத்தப்பட்ட அந்த பணிகள் மிகவும் செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய நிறுவனமொன்றானமையால் ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதற்காக நடவடிக்கை எடுத்தல் வளங்களின் விரயமாக கூடும். | கூட்டுத்தாபனத்தை தாபித்தமைக்கான நோக்கத்தினை அடைவதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 10 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | • உற்பத்தி பல்வகைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி – ஏற்றுமதியாளர்களின் தேவைகள் அடிக்கடி மாற்றமடைவதால் நாளாந்தம் இந்த பணிகள் இடம்பெறும்.<br>• அபிவிருத்தி உபாயம் மற்றும் தொழில் அமைப்புக்குறிப்பீடுகளின் அபிவிருத்தி – | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உரிய பணிகள் உச்ச அளவில் அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதும் எடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

- கேந்திர குழுக் கூட்டம் - ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட எனினும் ஏற்றுமதியாளர்களை சேகரிப்பதிலான சிரமத்தின் காரணமாக நடாத்த முடியாது.

- தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் - இணைப்பு சிக்கல்களின் காரணமாக நடாத்த முடியாது.

- CPA பெயர்ப் பலகையை பொருத்துதல் - கிரயம் உயர்வான பெறுமதியை கொண்டிருந்தமையால் மேற்கொள்ள முடியாது.

- நட்டஈட்டு கைநூல்களை தயாரித்தல் - பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

- முன் அல்லது பின் கப்பலேற்றல் கையேடு – ஆரம்பிக்கப்பட்டிருக்கவில் லை.

- மறு காப்புறுதி செய்தல் -

  தலைவர் அல்லது பணிப்பாளர் ஒருவர் இல்லாமையால் 2018 ஆம் ஆண்டின் போது அங்கீகாரத்தினை பெற முடியாதிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 ஆம் ஆண்டினுள் இரத்தினக்கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் விற்போருக்கான 12 கூட்டங்களும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள புலம்பெயர்ந்த ஊழியர்களுக்காக 48 தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், இந்த வேலைத்திட்டங்களில் முறையே ஒரு வேலைத்திட்டம் மற்றும் 05 வேலைத்திட்டங்கள் மாத்திரம் 2018 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் தலைவர் ஒருவர் இல்லாதிருந்தமை மற்றும் மாற்றமடைந்தமையின் அடிப்படையில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைக்காமை மற்றும் இணைப்பு குறைப்பாடு காரணமாக திட்டமிடப்பட்டவாறு கூட்டங்களுக்காக பங்குபற்ற முடியாதிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டினுள் சில கூட்டங்களில் பங்குபற்றியுள்ளது. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உரிய பணிகள் உச்சமாக அடைவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள்உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றினை அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், தனியார் கணக்காய்வு கம்பனியொன்றினால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2018 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் கிரயம் மற்றும் நலன்கள் தொடர்பில் கவனத்துடன் செயற்படுவதால் உள்ளக கணக்காய்வினை குறைந்த செலவிற்கு தொழில்சார் தகைமை பெற்ற கம்பனியொன்றினூடாக வெளிவாரியாக மேற்கொள்ளப்படுவதுடன், தனியானதொரு உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 செப்தம்பர் வரையிலும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டியதுடன், உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிடையே 34 உருப்படிகளின் 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல்கள் | விசேடமாக 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலக பொருளாதார வீழ்ச்சி உலக சந்தையில் பாராதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியது. இது கூட்டுத்தாபனத்தின் பணிகள் | பாதீடுகள் கூடியளவு சரியானதாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தொடர்பில் சாதாரண நிலமைகளின் கீழ் எடுக்கப்படும் தீர்மானங்களை விட பாரதூரமான தீர்மானங்களை எடுக்க தாக்கம் செலுத்தியதுடன், பொது திறைசேரியின் மீது தங்கியுள்ள நிறுவனமொன்று அல்ல என்பதால் சில விற்பனை செலவினங்களை மேற்கொள்ளல் பொருத்தமற்றதென கருதும் சந்தர்ப்பங்களில் அந்த செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |

## 4.6 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீபீ/17 இலக்கமுடைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் அனைத்து நோக்கங்களையும் நிலைபேறான அபிவிருத்திக்கு அமைவாக இருக்க வேண்டிய போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணுவதற்கு மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை திட்டமிடுவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐ.நா ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலிற்கு இணங்குதல் அனைத்து அரச நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |